# ★ கொழும்பில் படையினர் தீவிர பாதுகாப்பு


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 21 இதழ் 169

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5 - 8 - 1993


(கொழும்பு)

பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து கொழும்பில் தமிழர் பெருமளவில் வாழும் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு படையினர் பெருமளவில் நிறுத்தப்பட்டுள்ளனவாம்.

குண்டு வெடிப்புக்கான காரணம் தனிப்பட்ட பகையே என முதலில் கூறப்பட்டபோதும் இதன் பின்னணியில் வேறு காரணங்கள் இருக்கவேண்டுமென பொலி

(6ம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பு தொடர்பாக இருபது பேர் கைது

(கொழும்பு)

பம்பலப்பிட்டி கோவில் குண்டுவெடிப்பு தொடர்பாக 20ற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களில் பலர், தமிழ் இளைஞர்கள் எனவும், அருகில் முஸ்லிம்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நாசகுகள் தொடர்பாக மேலும் பலர் கைது செய்யப்படலாம் எனவும் அவர்கள் தெரிவித்ததுடன், பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (சி)

### ( ● இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண )

# சர்வதேச நாடுகளின் உதவியை இலங்கை அரசு நாடவுள்ளது

## ஜனாதிபதி 'விஜே' அறிவிப்பு

(சிங்கப்பூர்)

இலங்கையில் இன்னமும் தீர்வு காணப்படாதிருக்கும் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச நாடுகளின் உதவியை முதல் தடவையாக இலங்கை அரசு நாடவுள்ளதாக ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா நேற்று சிங்கப்பூரில் வைத்து மலேசிய செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்; இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினை காரணமாக நாடு பெரும் அழிவை எதிர்நோக்கி வருகிறது. இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் சர்வதேச சமூகத்தின் உதவியை அரசு நாடவுள்ளது.

பொதுவாக நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மகிழ்ச்சி அளிப்பதாய் இருப்பதாகவும் பணவீக்கம் குறைந்திருப்பதாகவும் ஏற்றுமதி கணிசமான அளவு அதிகரித்திருப்பதாகவும் கூறினார்.

எனினும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச நாடுகளிடமிருந்து இலங்கை எவ்வகையிலான உதவியை கோரும் என்பது குறித்து ஜனாதிபதி விஜயதுங்க தகவல் எதனையும் தெரிவிக்கவில்லை. (சி)

## யுத்தத்தைத் தொடர எதிரணிகள் ஆதரவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் யுத்தத்தைத் தீவிரமாக மேற்கொள்வதற்குப் பல முக்கிய எதிர்க்கட்சிகள் அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக 'ஏஜென்ஸி'ச் செய்திகள் தெரிவித்தன.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா, அரசுடன் இணையவுள்ள ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு. காமினி திஸநாயக்கா உட்படப் பல முக்கிய தலைவர்கள்

(6ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க நகரில் தமிழீழ தினம் பிரகடனம்

(நியூயோர்க்)

அமெரிக்க நகரத்தில் தமிழீழ தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க மசிசுசெட்ஸ் மாநிலத்தின் சமதி நகர மேயர் நிகலஸ் சப்புனாரோ வைகாசி மாதம் 22ம் திகதியை தமிழீழ தினமாக தனது நகரத்தை பிரகடனப்படுத்தி தமிழீழ தேசிய கொடியையும் ஏற்றி வைத்தார்.

அவர் வெளியிட்ட அறிக்

(2-ம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பாவில் ஆயுதம்வாங்க இராணுவ அதிகாரிகள் விரைவு

(கொழும்பு)

இலங்கைப் படையினருக்கு யுத்த தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக இராணுவ அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானப்படையினருக்கான யுத்த தளபாடங்களும், போர்

(6-ம் பக்கம் பார்க்க)

## லண்டன் சுவர்களில் கறுப்புஜூலை தினம்

(லண்டன்)

'கறுப்பு ஜூலை' தினத்தையொட்டி லண்டனில் தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் பகுதிகளில் இலங்கை அரசுக்கு எதிராக பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தனவாம்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில் அமைதியை விரும்பும் உலக மக்கள் இலங்கை அரசின் படுகொலைகளை கண்டிக்க வேண்டுமெனவும் கோரப்பட்டிருந்தன.

(6-ம் பக்கம் பார்க்க)

## கைதிகள் மூவரின் உடல்நிலை கவலைக்கிடமென அறிவிப்பு

(மணிலா)

யாழ்ப்பாணத்தில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் 33 கைதிகளில், மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் தாம் அறிந்துள்ளதாகச் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்று ஏ. எப். பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

தமது பிள்ளைகளின் உடல் நிலை மிக மோசமடைந்து வருவது குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள பெற்றோர்,

(6ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எழுதும் கடைசிக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளின் உறவினர்கள், ஜனாதிபதி விஜேதுங்கவுக்கும், பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவுக்கும் யுத்தக் கைதிகளின் தற்போதைய நிலைமை குறித்தும், அவர்களை விடுவிப்பது தொடர்பாகவும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அதில் அவர்கள் அரசுக்குத் தாங்கள் எழுதும் இறுதிக் கடிதம் இது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் யுத்தக் கைதிகள் தொடர்பாக, இலங்கை வானொலியும், ரூபவாஹினியும் இருட்டடிப்புச் செய்து வருகின்றன தமது பிள்ளைகள் இறக்க நேரிட்டால், அவர்களது உடல்களுக்கும் இட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி-பூநகரி படகுச்சேவை இன்று 5-ம் திகதி நாளை 6-ம் திகதி நாளை மறுதினம் 7-ம் திகதி, ஆகிய 3 நாட்களிலும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது. (சி)

## கொழும்பில் டாக்டர்கள் தவறால் தமிழ் நோயாளி மரணம்

(கொழும்பு)

அறுவைச் சிகிச்சை செய்யும்போது டாக்டர்களின் கவனக் குறைவினால் கத்தி ஒன்றை உடலின் இருதயத்தினுள்ளே வைத்து தைத்ததினால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் மரணமாகியுள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: போரினால் பாதிக்கப்பட்ட பிரான்சிஸ் செல்வநாதன் என்ற 30 வயதுள்ள இந்தத் தமிழர்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லை ஆதீனத்தில் பாலாஜி சமயப் புத்தகங்கள், சிறுவர்களுக்கான புத்தகங்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள பாலாஜி புத்தகசாலை, நல்லை ஆதீனம். (ஏ-3291)

### புத்தகங்கள் விற்பனை

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு இந்திய நாவல்கள், ஆக்சநெறிகள், ஆங்கிலதமிழ் களஞ்சியம் (மதிருஸ் டிக்செநெறி) ஸ்ரீகாந்தா புத்தகசாலை, நல்லூர். (ஏ-3277)

### தேவை

¼ அங்குல இரும்புக்கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். துண்டுக்கம்பிகளாயின் 2½ அடிக்கு மேல் இருத்தல் வேண்டும். தொடர்புக்கு: சக்திப்பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன் துறை வீதி, தாவடிச்சந்தி, தாவடி. (எ-3294)

### அறிவுக்களஞ்சியம்

அறிவுக் களஞ்சியம் - 14 விற்பனையாகிறது ரூ 3000/- பரிசுக்கான சிறப்புப் பொது அறிவுப் போட்டி வினாக்களும் போட்டிகளுக்கும் இந்த இதழில் வெளிவந்துள்ளன. ரூபா 12/- எங்கும் கிடைக்கும். (எ-3306)

### "நீமியா"

நீமியா உரம் வேப்பம் பிண்ணாக்கை ஆதாரமாகக் கொண்டது. மண்வளம் பெருக்கி பயிரைத் தாக்கும் பூச்சிகளை விரட்டி விளைச்சலைப் பெருக்குகிறது. கிலோ ரூபா 18/-. அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. "மிக்கவைற்", (எ-3307)

— பெயர் மாற்றம —
யாழ் நகரை வசிப்பிடமாகக்
கொண்ட "கணேசா"
ஆகிய எனது பெயர்
G.V. Kanesalinkam
என மாற்றம் செய்யப்பட்டு
ள்ளது என்பதை சகலருக்
கும் அறியத்தருகிறேன்
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 330)

## முதலுதவிச் சேவை

(கொழும்புத்துறை)

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவ தினங்களில் யாழ். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் வழமைபோல் இவ்வருடமும் தொண்டர் சேவையில் ஈடுபட்டு வருவதுடன் முதலுதவிச் சேவைகளையும் நடாத்தி வருகின்றனர். (154)

## யாருடையது?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு வருகை தந்த எவரோ ஒருவர் தொலைத்த சொற்ப பணத்தைக் கண்டெடுத்த வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி சி. சோபிதாவும் உரும்பராய் இந்துக்கல்லூரி மாணவி செல்வி க. பாமாவும், அதனைக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பணத்தைத் தொலைத்தவர் சரியான ஆதாரம் காட்டி கல்விப் பணிப்பாளரிடம் பணத்தை நேரில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [வி]

## தமிழ் இளைஞர் நட்புறவுக் கழகம்

(பாரிஸ்)

பிரான்ஸிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களினால் "வான்மதி தமிழ் இளைஞர் நட்புறவுக் கழகம்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கழகம் 'வான்மதி' என்னும் சஞ்சிகையை வெளியிடுவதுடன் ஐரோப்பிய நாடுகளில் கலைநிலா என்னும் தமிழ் கலாசார நிகழ்ச்சியையும் நடாத்திவருகிறது.

இக்கழகத்தின் தலைவர் சி. பாலமுருகன், செயலாளர் கு. சிவரூபன், உபதலைவர் ப. அருள்குமார் பொருளாளர் ம. டக்ளஸ் ஆகியோர் செற்பட்டு வருகின்றனர். -வி

## விரிவுரை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கத்தின் ஆதரவில் புதிய உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான விரிவுரை வகுப்புகள் யாழ். சென் பத்றிக்ஸ் கல்லூரியில் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ்விரிவுரை வகுப்புகள், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 1 மணிவரை நடைபெறுவதாகவும் யாழ். மாவட்டத்திலுள்ள 43 விளையாட்டுக்கழகங்களிலிருந்து இரு பிரதிநிதிகள் மேற்படி விரிவுரைவகுப்பில் கலந்து கொள்வதாக இச் சங்கத்தின் தலைவர் திரு. கே. என். வை. மொறிஸ் தெரிவித்தார். -வி

## செயலக சுற்றுலா சேவை நிறுத்தம்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறையில் வாரமொருமுறை நடாத்தப்பட்டு வந்த பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் சுற்றுலாச் செயலகம் நிறுத்தப்பட்டுள்ளது. இச்சுற்றுலாச் செயலகத்தை வல்வெட்டித்துறையில் நடாத்துவதற்கான அனுமதியை வடக்கு கிழக்கு மாகாணசபை வழங்காமையினாலேயே இச்சுற்றுலாச் செயலகம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. -52

## சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் -பறுளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானம் தமிழர் சங்கடங்கள் தீர சகல சைவப் பெருமக்களையும் எதிர்வரும் 6-ம் திகதி வெள்ளிக்கிழமை மஹா சங்கட சதுர்த்தி விரதத்தை அநுட்டிக்குமாறு வேட்டுக்கொள்கின்றது.

## அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைவில், இலங்கைத்தீவில் 2 தேசிய இனங்கள் உண்டு என்பதை வரலாறு நிரூபிக்கிறது. 1833ம் ஆண்டு நிர்வாக சீர்திருத்தங்களுக்காக தமிழ், சிங்கள தேசங்களாக இருந்தமையை அழித்து ஒரு நிர்வாகத்தின்கீழ் பிரித்தானியர் கொண்டு வந்தனர்.

தற்போது சிங்கள அடக்குமுறையின்கீழ் தமிழ் மக்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். புதிய உலக ஒழுங்கின்கீழ் தமிழரின் சுயஉரிமையை அங்கீகரிப்பதோடு தமிழீழ விடுதலை அங்கீகரிக்கப்படவேண்டும்.

அமெரிக்க காங்கிரசும் அமெரிக்க ஜனாதிபதியும் தமிழீழ தேச உரிமையை அங்கீகரிக்க, இவ்விடயத்தை ஐ நா. சபைக்கு எடுத்துச் சென்று ஆதரவு தெரிவிக்கவேண்டும்

இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் சிங்களவர்களிலிருந்து மொழியால், பண்பாட்டால், கலாசாரத்தால் வேறுபட்டவர்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சமதி மாநகரம் தமிழீழ தேசிய உரிமையை அங்கீகரிப்பதோடு உலக சமுதாயமும் அங்கீகரிக்கவேண்டும் என்றும் தமிழ் மக்கள் தங்கள் போராட்டத்தில் வெற்றிபெறும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்றும் அவர் அங்கு உரையாற்றும் போது கூறினார். (கே-வி)

## நோயாளர் கஷ்டம் தீரும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை எக்ஸ்-றே இயக்குநர் லீவில் செல்லும்போது வைத்தியசாலை நோயாளர்கள் எக்ஸ்-றே எடுப்பதற்கு அனுபவித்துவரும் இன்னல்கள் விரைவில் நீக்கப்படுமென யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பீ. இரத்தினசபாபதி வைத்தியசாலை அபிவிருத்தி சபைக்கு அறிவித்துள்ளார். [52]

## போஷாக்கு உணவு விநியோகம்

(வட்டுக்கோட்டை)

மானிப்பாய் கட்டுடையில் இயங்கிவரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 'கிவோஸ்' அமைப்பின் உதவியுடன் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மாதத்தில் இரு தடவை தலா ஒன்றரைக் கிலோ வீதம் போஷாக்கு உணவை வழங்கி வருகின்றனர். (139)


## 9வது நினைவஞ்சலி

தோற்றம்:

05-06-1955

மறைவு:

05-08-1984



### அமரர் சங்கரன் மனோகரன்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காயும் வழிகாட்டியாயும் திகழ்ந்து எங்களை ஆழ்த்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே! உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, பெற்றோர், சகோதரர்கள், சகோதரி, அண்ணிமார் மற்றும் குடும்பத்தினர்.

37, விக்டோரியா றோட்,
யாழ்ப்பாணம். சி-3-8

## சுழிபுரம்—பறுளாய் ஈசுரவிநாயகர் தேவஸ்தானம்

தமிழர் சங்கடங்கள் தீர:

### நாளை மகா சங்கடஹர சதுர்த்தி விழா (6-8-93)

### அஷ்டோத்தரசத கலசாபிஷேகம் (108)

விநாயகன் அடியார்களே!

சுழிபுரம் - பறுளாய் ஈசுரவிநாயகர்
தேவஸ்தானத்தில்

### தமிழர் சங்கடங்கள் தீர

நாளை (6-8-93) வெள்ளிக்கிழமை மகா சங்கடஹர சதுர்த்திவிழா நடைபெறும்.

ஈசுரவிநாயகருக்கு பி. ப 3-00 மணியளவில் விசேஷ அபிஷேகம் ஆரம்பமாகி 108 கலசாபிஷேகமும் நடைபெறும். பின்னர் பூசை வழிபாடுகளுடன் அஷ்டோத்தரசத வில்வ அர்ச்சனையும் நடைபெற்று எம்பெருமான் எழுந்தருளி அடியார்களுக்குக் காட்சி தருவார். அதனைத் தொடர்ந்து ஆலய குரு நற்சிந்தனை வழங்குவார்.

இரவு 9-45 மணியளவில் சந்திரோதயம் ஆனதும் சந்திரபகவானிடம்

### தமிழன் விடுதலை பிரகாசிக்க

அநுக்கிரகம் வேண்டி சந்திர பூஜையுடன் வழிபாடும் நடைபெறும்.

அடியார்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

சோழியூரான்
பிறைசூடிக்குரு
விழா அமைப்பாளர்

(வி-384)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### பொது அறிவித்தல்

ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்ற 5\6/93ஆம் இலக்க வழக்கின் படியான இடைக்காலத் தடையுத்தரவுக்கமைவாக 1993ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரமான சோலைவரி அறவீடு மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதனை மாநகர சபையின் சகல வரியிறுப்பாளர்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 04-08-1993. (எ-2313)

## 'நல்லைக் குமரன் மலர்'

### வெளியீடு - 07-08-93

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினால் எதிர்வரும் 07-08-93ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு 'நல்லைக் குமரன் மலர்' வெளியீடு செய்யப்படவுள்ளது.

மேற்படி நிகழ்ச்சியில் பங்குபற்றி முதல் நாள் மலரினைப் பெற்று, எமக்கு ஆதரவு நல்க விரும்புவோர் எதிர்வரும் 07-08-93ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு முன்னதாகக் கீழ்க்காணும் மாநகர அலுவலகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

01. மாநகராட்சி மன்றத்தின் பிரதான அலுவலகம்.
02. நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் மேற்கு வீதியிலுள்ள சுகாதார அலுவலகம்.
03. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கண்டி வீதி, சுண்டிக்குளி.

சைவ சமய விவகாரக் குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 04-08-1993. (எ 3314)

மணிவாக்கு

"உறுதியும் அன்பும் நம்மிடம் தோன்றும் பெரிய கவலைக்குழியை நீக்கும்."

- எமர்சன்.

# நமது நோக்கு

## அரசியலும் மதமும்

அரசியலிலிருந்து மதத்தைப் பிரிக்கும் சட்ட மூலம் ஒன்று இந்தியப் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்துள்ளது.

இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் இடையே மதப்பூசல்; எனவே பாகிஸ்தான் உருவானது.

ஆகவேதான் சுதந்திர இந்தியாவின் யாப்பினைத் தயாரித்தவர்கள் மதச்சார்பின்மையை வலியுறுத்தினார்கள்.

இந்துக்களின் நலன் களைக் கவனிக்க இந்துமகாசபை, பாரதீய ஜனசங்கம், ராம் ராஜ்ய பரிஷத், ராஷ்டிரிய சுவயம் சேவக சங்கம் ஆகியன தோன்றின.

மகாத்மா காந்தியின் கொலையோடு சுவயம் சேவக சங்கம் தடைசெய்யப்பட்டது. ஆனால், அச்சங்கத் தலைவர் கோல்வால்கர், அரசியலில் சங்கம் ஈடுபடாது என்று எழுத்து மூலம் கொடுத்த வாக்குறுதியைத் தொடர்ந்து தடை நீக்கப்பட்டது.

மேற்படி பல இந்து மன்றங்களே இன்று பாரதீய ஜனதாக்கட்சி என மறு அவதாரம் எடுத்துள்ளது; நேரு குடும்பத்தினரின் மறைவுக்குப் பின் மக்களின் செல்வாக்கைப் பெற்றுவருகின்றது.

முஸ்லீம்களின் ஆட்சியின்போது, இந்துக் கோவில்கள் பல இடிக்கப்பட்டன, என்பதை நினைவுபடுத்தி, வரலாற்றுத் தவறுகள் திருத்தப்பட வேண்டுமென்ற காரணமே இராமர் கோவில் மீண்டும் கட்ட எடுக்கும் முயற்சி; ராம் ஜென்ம பூமிப் பிரச்னை!

பாபர்மசூதி இடிக்கப்பட்டபோது, தடுத்து நிறுத்த முடியாத அரசு தற்போது மதத்தை அரசியலிலிருந்து பிரிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

சில கட்சிகளை, அமைப்புகளைத் தடைசெய்ய வழிவகுக்கும் என்பது அவர்கள் எதிர்பார்ப்பு!

சீனப்படை எடுப்பின் போது பிரிவினைகோரும் தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. தி.மு.க.தலைவர் அண்ணாதுரை அஞ்சவில்லை; கொள்கையில் மாற்றம் செய்துவிட்டு, தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியையே கைப்பற்றி விட்டார்!

எனவே பாரதிய ஜனதாக்கட்சிமீது கண் வைத்து வீசப்படும் அஸ்திரம் கூர்மழுங்கிப்போகக் கூடும்.

அங்கே - மதச்சார்பின்மைக் கொள்கையைக் கொண்ட நாட்டிலே, மதத்தை அரசியலிலிருந்து பிரித்திட முயற்சி!

இங்கே - அரசியல் யாப்பிலேயே ஒரு மதத்திற்கு முக்கிய இடம் கொடுத்து வளர்க்கும் பரிதாப நிலை!

# தங்கப்பதக்கம் பெறச்சென்ற யாழ். மாணவன் பட்ட அவதி

## ரூ. 10,000 கொடுத்து சிறை மீண்டார்

(உடுவில்)

கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்று நடாத்திய போட்டியில் தங்கப்பதக்கம் பரிசு பெற்று அதனைப் பெற கொழும்பு சென்ற யாழ் மாணவன் ஒருவருக்கு சிறை சென்று மீண்ட சம்பவம் ஏற்பட்டுள்ளது.

புறக்கோட்டை பொலிசாரால் விடுதலைப் புலி என சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு 33 நாட்கள் சிறை வைக்கப்பட்டு விடுதலையான யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் சுப்பிரமணியம் மணிவண்ணன் என்பவருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

தனியார் நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்பட்ட குழாய் பொருத்துனர்களுக்கான போட்டி ஒன்றில் கடந்தவருடம் மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும் அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடத்தையும், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் சுப்பிரமணியம் மணிவண்ணன் பெற்றிருந்தார்.

உடுவிலைச் சேர்ந்த மணிவண்ணன் தனக்குகிடைத்த பணப் பரிசினையும், தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு சென்றிருந்த போது டாம் வீதியில் உள்ள விடுதியொன்றில் வைத்து புறக்கோட்டை பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

முப்பத்திமூன்று தினங்களாக இவர் பொலிசாராலும், சி. ஐ. டி. பிரிவினராலும் கடும் விசாரணை செய்யப்பட்டபின்னர் வழக்கறிஞர் ஒருவர் மூலம் ரூ.10,000 பணம் செலுத்தி விடுதலைசெய்யப்பட்டார்.

கொழும்பில் உள்ள விடுதி உரிமையாளர்கள் அங்குவந்து தங்கும் யாழ்ப்பாணத்து தமிழர்களை வேண்டுமென்றே பொலிசாரிடம் காட்டிக்கொடுத்து கைதுசெய்வித்து பின்னர் நல்லபிள்ளைகளாக அவர்களை விடுவித்து அதற்கான 'கூலி'யையும் பெற்றுக் கொள்கின்றனராம்.

சோதனை என்ற பெயரில் தமிழர்களிடம் பணம் பறிக்கும் வேலைகள் தினமும் நடைபெறுகின்றன. 'ஐ. ஆர். சி' காரர்களினதும் போலி சி. ஐ. டி. யினரதும் நடமாட்டம் கொழும்பு நகரில் அதிகரித்து காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அடையாள அட்டைகளைப் பரிசோதிப்பதாகக் கூறிக்கொண்டு அவர்களிடம் இருக்கும் பணம் நகை முதலியவற்றை அபகரித்து சென்றுவிடுகின்றனராம். (109-சி)

# போதைவஸ்து கடத்தலை தடுக்க

# சுங்கதுறையும் பொலிஸாரும் கூட்டுக் கடல் ரோந்து

(கொழும்பு)

நாட்டிற்குள் பயங்கர போதைவஸ்து கடத்திவரப்படுவதை தடுப்பதற்கு சுங்கத்துறையினரும் பொலிஸாரும் இணைந்த கூட்டுக்கடல் ரோந்து நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

தேசிய அபாயகர மருந்து கட்டுப்பாட்டுச்சபை போதைபொருள் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதற்கான முன்னுரிமை நடவடிக்கைகளில் ஒன்றாக இத்தகைய செயல்பாட்டிற்கான சட்டமுறையை மறுசீரமைப்பதற்கான யோசனையை தெரிவித்துள்ளது.

போதைபொருள் துஷ்பிரயோக ஒழிப்பு நடவடிக்கைக்கான செயல்பாட்டுமற்றும் கண்காணிப்பு என்ற தலைப்பிலான பாரிய திட்டத்தில் இத்தகைய நடவடிக்கைகளுக்கு பொலிஸ் பகுதியிலும் தனி கண்காணிப்புமுறை வருவதன் தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது. (ரி)

## ரயர், ரியூப் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்குச் சகாய விலையில் விநியோகிப்பதற்காகக் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் சைக்கிள் ரயர், ரியூப் கொண்டு வரப்பட்டுள்ளது.

சகல ஊழியர்களுக்கும் விநியோகிப்பதற்கு இவை பற்றாக்குறையாக இருப்பதாகவும் வெளிக்கள கடமையில் ஈடுபடும் ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவை விநியோகிக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [(72-சி)

# தளபாட விபரங்களை

## அமைச்சு கோருகிறது

(உடுவில்)

1989-1992 காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட தளபாட விபரங்களை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்ட அமுலாக்கல் பிரிவு கோரியுள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜனாப் எம். ஏ சீ மொஹைதீன் கோட்டக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்தில் மேற்படி காலப்பகுதியில் வழங்கப்பட்ட மேசைகள், கதிரைகள், மற்றும் கரும்பலகைகள் போன்ற விபரங்களும் அவற்றுக்கான மொத்த பெறுமதிகளும் பாடசாலை ரீதியாக தயாரிக்கப்பட்டு திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார். (109-சி)

## கைத்தொழில் நிறுவனங்களை

# பதிவுசெய்யும் இறுதி திகதி

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் கைத்தொழில் மேம்பாட்டினை மையமாக வைத்து அதனது முதற்கட்ட நடவடிக்கையாக கைத்தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்யும் வேலைகளை தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

தமிழீழத்திலே பூரணமாக இயங்கிக் கொண்டிருக்கும் கைத்தொழில் நிறுவனங்களும், கடந்த காலங்களில் இயங்கி தற்கால சூழ்நிலையால் இயங்காதிருக்கும் கைத்தொழில் நிறுவனங்களும், புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் கைத்தொழில் நிறுவனங்களும் தம்மை தவறாது பதிவுசெய்து கொள்ள வேண்டும் என தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

பதிவுசெய்யும் நடவடிக்கைகளில் சவர்க்காரம், கண்ணாடி, இரசாயனப் பொருட்கள், புடவைக் கைத்தொழில், விவசாய உபகரணங்கள், உலோக உற்பத்திப் பொருட்கள், இறப்பர், இறப்பர் சார்ந்த பொருட்கள், தும்பு சார்ந்த பொருட்கள், தோல் பொருட்கள் உற்பத்தி, மின்சார உபகரணங்கள் இலத்திரனியல், கட்டிடப் பொருட்கள், உணவு உற்பத்தி (உணவகம் தவிர்ந்த) கால்நடை உணவு (கோழித்தீன் உட்பட) மருந்து வகை; பல்பொருட்கள் (கற்பூரம், மெழுகுவர்த்தி, பற்பொடி, சீயாக்காய்ப் பவுடர், ஊதுபத்தி போன்றவை) ஆகிய நடவடிக்கைகள் உள்ளடங்கும்.

கைத்தொழில் நிறுவனங்களை பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 15ம் திகதியுடன் முற்றுப்பெற்று விடுமெனவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## பயிற்சி வகுப்பு

(மானிப்பாய்)

யாழ். பல்கலைக்கழக 4-வது ஆண்டு மருத்துவபீட மாணவர்களுக்கு யாழ். செயலகத்தின் பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் சம்பந்தமான பயிற்சி வகுப்பு சில தினங்களாக நடைபெற்று வருகின்றது.

இதற்கான பயிற்சி வகுப்புகளை வடபிராந்திய உதவிப் பதிவாளர் நாயகம் திரு. என். போமன் நடாத்தி வருகின்றார். (71)

## இணைய செயற்குழு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது அடுத்த காலாண்டு செயற்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

செயற்குழு விபரம், தலைவர் கே என். வை. மொறிஸ் (வை எம், சி ஏ.) செயலாளர் வே. ஜெயராசசிங்கம் (சிறுவர் பாதுகாப்பு நிதியம்-யு கே) பொருளாளர் இ. இளங்கோ (ரி. ஆர். ஓ.) பத்திரிகை ஆசிரியர் க. ஜீவகதாஸ் (அருவழி) மற்றும் ஊற்று, சர்வோதயம், உறெம்பாஹ, ரி ஆர் ஆர் ஓ தெள்ளிப்பழை திருச்சபை போன்றவற்றின் பிரதிநிதிகளும், நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். (ரி)

## இராசிபலன்

05 08-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஆடி 21)

திருதியை காலை 10-09 வரை சதயம் ந. ப. 11-53 வரை இராகுகாலம் நண்பகல் 1-34 முதல் 3-04 வரை சுபநேரம் பகல் 7-34 முதல் 9-04 வரை மரணயோகம்.

மேடம்: மனதுக்கினிய சம்பவம், பேச்சுவன்மை, பிறர் பாராட்டு.

இடபம்: தொழில் மாற்றம் வருவாய் பாதிப்பு, புதிய கடன்.

மிதுனம்: வீட்டில் முரண்பாடு, உடம்புவேதனை, செலவு.

கடகம்: விதண்டாவாதம், கடும் சினம், முயற்சித்தடை.

சிங்கம்: மனைவியால் உதவி, தொழில் சிறப்பு, இனசன மகிழ்ச்சி.

கன்னி: புத்திரச் செலவு, வெளியூர் செய்தி, கடமை உணர்வு.

துலாம்: மேலதிகாரிகளின் கண்டிப்பு, மனவேற்றுமை, அசதி.

விருச்சிகம்: மனதுயரம், நண்பர் விரோதம், பணக்கஷ்டம்.

தனுசு: ஆத்மபலம், சுபகாரிய செலவு, குடும்ப பெருமை.

மகரம்: தொழில் போட்டி, உறவினர் நச்சரிப்பு, மனப்பயம்.

கும்பம்: நிலைமாற்றம், சுகம், நல்லவர் சேர்க்கை.

மீனம்: பொருளாதார இக்கட்டு, பெண் சீற்றம், பிறர் தொல்லை.

ஜோஸ்யர்

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய உற்சவகால நிகழ்ச்சியில் இன்று நாவலர் மணிமண்டப முன்றலில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில் ஜீ. சாந்தனின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும். எ. ஜெயராமன் வயலின், சதாவேல்மாறன் மிருதங்கம், பி. வரதன் தபேலா. (162)

## தருமத்தை காத்திடு

சந்ததம் உன்னை நினைந்து பணிந்தடி
சார்ந்திடும் அடியரோடு
வந்தனை செய்துனை வாழ்த்தியே நிதமும்
வணங்கிடும் யாவருக்கும்
தந்தருள் செய்திடு தருமத்தைக் காத்திடு
தமிழரின் இறை முருகா
நிந்தனை செய்பவர் வெந்து மடிந்திட
நின்படை வேலைவிடு

- நெடுந்தீவு லக்ஸ்மன்

(இன்று நல்லூர் கந்தன் 13ம் நாள் உற்சவம்)

மறந்த நிலமிருக்க மறந்து திரிவானேனேன்
சிறந்த வளமிருக்க சிதைந்து திரிவானேன்.

# உலகரீதியில் ஆட்களைகடத்தும் தமிழ் ஏஜென்சிகள் ஜேர்மனியில் கைது

(பிராங்போட்)

உலக ரீதியில் தமிழர்களை ஐரோப்பாவுக்குக் கடத்தி வந்த 20 பேர் கொண்ட தமிழர் குழுவொன்றை ஜேர்மன் பொலிசார் அடையாளம் கண்டுள்ளதாகவும் இதில் 9 பேரை ஜேர்மன் பொலிசார் கைது செய்துள்ளதாகவும் ஜேர்மன் அரசு தெரிவித்துள்ளது.

இக்குழுவுக்கு கொழும்பு, மாஸ்கோ, பராக் ஆகிய இடங்களில் முகவர்கள் இருப்பதாகவும் இதுவரை சுமார் 2000 பேரை இவர்கள் ஐரோப்பாவுக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 2000 பேர் மூலம் இவர்கள் 20 மில்லியன் மார்க்குகளைச் சம்பாதித்துள்ளனர்.

கடந்த சிலமாதங்களாக இவர்களது தொழில் அம்பலத்திற்கு வந்தபோதிலும் இதில் சம்பந்தப்பட்ட சகலரையும் பொலிஸ் வலைக்குள் ஒரேயடியாகச் சிக்கவைக்கும் எண்ணத்துடன் தக்க தருணம் எதிர்பார்த்திருந்ததாகவும் அண்மையில் பல இளைஞர்களை இவர்கள் ஜேர்மனிக்குக் கொண்டு வந்தசமயம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

300 முதல் 500 பேர் இவர்கள் மூலம் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். ஏனையோர் பிரான்ஸ், சுவிற்ஸலாந்து போன்ற நாடுகளில் தஞ்சம் கோரியுள்ளனர். பிடிபட்ட சந்தேக நபர்களுக்குப் பெருந்தொகை அபராதத்துடன் 5 வருடச்சிறைத் தண்டனை வழங்க ஜேர்மன் புதிய சட்டத்தில் இடமிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## விதை உருளைக்கிழங்கு விரைவில் விநியோகம்

(உடுவில்)

1993-94 கால போகத்துக்குத் தேவையான 'டிகிறி' இன விதை உருளைக்கிழங்கு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய கமநல சேவைத் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படவுள்ள விதை உருளைக்கிழங்குக்குரிய முழுத் தொகையும் முற்பணமாக செலுத்தப்பட வேண்டும் எனவும் எனவே இவ்விதை உருளைக்கிழங்கை பெற விரும்பும் விவசாயிகள் தத்தமது பகுதியில் உள்ள கமநலசேவை நிலையங்களில் இம்மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் பணத்தைக் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விதை உருளைக்கிழங்கு அந்தர் ஒன்று மூவாயிரத்து ஐநூறு ரூபாவாக வழங்கப்படும்.

ஒவ்வொரு கமநலசேவை நிலையத்திலும் விதை உருளைக்கிழங்கு பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை கமநல சேவை நிலைய ரீதியாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு விவசாயிக்கு நான்கு அந்தர் விதை உருளைக்கிழங்கு மட்டுமே வழங்கப்படுமெனவும் சிரேஷ்ட உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். 109-வி

# கத்தி வெட்டினுல் குடும்பஸ்தர் காயம்

(பண்டத்தரிப்பு)

உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கத்தி வெட்டில் முடிந்த சம்பவம் மல்லாகத்தில் நடைபெற்றுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக தற்போது மல்லாகம் நீதிமன்றத்துக்கு சமீபமாகவுள்ள அளவெட்டியில் வசித்துவரும் கட்டுவனைச் சேர்ந்த வி. சின்னத்துரை என்பவர் கையில் பலத்த கத்தி வெட்டுக் காயத்துக்குள்ளாகி யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காவல்துறையினர் இது பற்றி விசாரணை நடத்திவருகின்றனர். (72-வி)

## சிற்றூழியர் வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை

(மானிப்பாய்)

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள மாவட்ட செயலகங்களிலும் பதிவாளர் நாயகத் திணைக்களத்திலும் பணிபுரியும் அலுவலக சிற்றூழியர்களை சிற்றூழியர் சேவை தரம் 1, 11ம் வகுப்பிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பொதுநிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலும் இப்பதவிக்கு 31-12-91ம் ஆண்டுக்கு முன் மாவட்ட செயலாளர் அலுவலகங்களிலும், பதிவாளர் நாயகத் திணைக்களத்திலும் பணி புரிந்து தற்போது வேறு திணைக்களங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு விண்ணப்பம் செய்யலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (71-வி)

# மேம்பாட்டு கழகத்தின் சுற்றுடல் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜூன் 5ம் திகதி கொண்டாடப்பட்ட உலக சுற்றுடல் தினத்தன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து பல வேலைத் திட்டங்களை பரவலாக மேற்கொண்டிருந்தது.

இதில் பிரதான வேலையில் முன்பு நடப்பட்ட மரக்கன்றுகளின பாதுகாப்புக் கூடுகளை திருத்தியமைத்தல், நடப்பட்டிருந்த மரக்கன்றுகளைச் சுற்றியிருந்த களைகளை, பற்றைகளை அகற்றி துப்பரவு செய்தல், பாதுகாப்புக்கூடுகளை திருத்தியமைத்தல், நீர் ஊற்றுதல், பட்ட இடங்களில் புதிய மரக்கன்றுகளை நடுதல் ஆகியவையே பரவலாகச் செய்யப்பட்ட வேலைத்திட்டங்களாகும்.

இந்நிகழ்வுகளில் கிராமிய உற்பத்திக்குழுக்களும், உள்ளூர் ஸ்தாபனங்களும், பொதுமக்களும் பங்கேற்றனர். அத்தோடு சூழல் பாதுகாப்பு பதாதைகள் தொங்கவிடல், துண்டுப்பிரசுரங்கள் வெளியிடல், கருத்தரங்குகள் ஆகியனவும் நடாத்தப்பட்டன. (வி)

## விறகு வெட்டச் சென்ற பெண்கள் வெட்டுக் காயங்களுடன் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

விறகு வெட்டி வரக் காட்டுக்குச் சென்ற இரு இளம் தமிழ் பெண்கள் கொடூரமான முறையில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டனர்.

அக்பேவெல எனும் இடத்திலுள்ள வேரலிக் தோட்டத்தில் வசிக்கும் பொன்னையா கமலாதேவி (18 வயது) செல்லையா சரஸ்வதி (19-வயது) ஆகிய இரு யுவதிகளும் விறகு தேடிக் காட்டுக்குச் சென்றதாகவும் இரவு வீடு திரும்பாமையினால் பொலிசாரின் உதவியோடு இவர்களைத் தேடிச் சென்றபோது கழுத்து வெட்டப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டனராம்.

இது தொடர்பான புலன் விசாரணைகளை வெலிமடைப் பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர். (வி)

# நற்பிரஜைகள் உருவாக ஆரம்ப கல்வி அத்திவாரம்

(யாழ்ப்பாணம்)

கிராமம் வளர்ந்தால்தான் நாட்டை உருவாக்கமுடியும், நாட்டின் நற்பிரஜைகள் உருவாக ஆரம்பக்கல்வி பலம் வாய்ந்த அத்திபாரமாகும்.

இவ்வாறு, கலட்டி அம்மன் பாலர் பாடசாலையின் இரண்டாவது ஆண்டு விளையாட்டு விழாவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் நிர்வாகி சட்டத்தரணி வி. சிவலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் தெரிவித்தார். விழாவிற்கு திருமதி க. செவ்வந்தி தலைமைதாங்கினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், கிராமிய பாடசாலைகளை வளர்க்கும் பணி இக்கிராம மக்களையே சார்ந்த பெரும் பொறுப்பாகும் என்றார்.

விழாவில் நல்லூர்வட்ட பொறுப்பாளர் எழிலனும் உரையாற்றினார். (எஸ்-வி)

### சுகாதார ஊழியருக்கு சீருடை வழங்க தாமதம்

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 1993ம் ஆண்டுக்கான உத்தியோக பூர்வ சீருடைகளை கொழும்பிலிருந்து கொண்டு வந்து விநியோகிப்பதற்கு அனுமதி வழங்குவதில் கட்டுப்பாடு தன்மை அலுவலகம் காலதாமதம் செய்வதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)

## இயந்திரம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பிடாரி கோவிலடியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்துக்கு அருகாமையில் உள்ள அவரது தோட்ட வளவிலுள்ள குழாய்க்கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 5000 பெறுமதியான கைவினால் இயக்கும் நீர் இறைக்கும் இயந்திரம் கடந்த 25ம் திகதி இரவு இனந்தெரியாத திருடர்களால் களவாடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று கடந்த யூலை மாதம் 27ம் திகதி இவரது வீட்டில் நாட்டப்பட்டிருந்த பத்திற்கும் மேற்பட்ட நல்லின தென்னங்கன்றுகளும் களவாடப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். -162 கி

## மடுமாதா ஆவணித் திருவிழா

(அளவெட்டி)

மன்னார் மடுத்திருப்பதியில் மடுமாதா ஆவணித்திருவிழா நாளை 6ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15ந்திகதி ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறும் கூட்டுத்திருப்பலி திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் திருவிழா நிறைவுபெறுகின்றது. -59

## உதைபந்தாட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கலைமகள் ச. ச. நிலைய ஆதரவில் வீனஸ் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட 26-வது வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 'பி' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் கழகமும், 'ஏ' பிரிவில் மயிலணி ஸ்ரீமுருகன் கழகமும் வெற்றி பெற்றன. (வி)

## இடமாற்றம் ரத்தானது

(மானிப்பாய்)

யாழ். செயலகத்திலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஊழியர்களின் இடமாற்றங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

இத்திணைக்களத்திலுள்ள இரு ஊழியர்களும் கடந்த மார்ச் மாதத்திலிருந்து கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். இதனால் இத்திணைக்களம் மூடப்படவேண்டிய நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து யாழ் அரச அதிபர், சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் தொடர்பு கொண்டதற்கிணங்க இவர்களது இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. -71

## நூல்வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அளவையூர் கவிஞர் வே. ஐயாத்துரையின் வளர்மொழிச் சிறுவர் கவிதை நூல் வெளியீட்டுவிழாவும் தமிழ் கவிஞர் வட்ட (தமிழவம்) பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை நான்கு மணிக்கு யாழ்ப்பாணம் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ். இலக்கியவட்ட ஏற்பாட்டில் நடைபெறும் இவ்விழாவிற்கு யாழ். மாவட்ட உதவி ஆணையாளரும், யாழ். இலக்கிய வட்ட தலைவருமான திரு. க. வைத்திலிங்கம் தலைமை தாங்குவார். தலைவம் தொண்ணூறு தொண்ணூற்று மூன்றும் ஆண்டுக்கான சிறந்த நாவலாசிரியர் விருதை திரு து. வைத்திலிங்கம் திருமதி கோகிலா மகேந்திரனுக்கு வழங்குவதுடன். விழாவில் சிறப்புரைகளை திருவாளர்கள் க. சொக்கலிங்கம், கலாநிதி நாரைசுந்தரம்பிள்ளை, கல்வயல் குமாரசாமி, ஐயா சச்சிதானந்தன் ஆகியோர் நிகழ்த்துவர். (எஸ்)

## கட்டாக்காலி நாய்கள்

(அளவெட்டி)

யாழ். மாநகரசபை ஊழியர்களினால் நகர வீதியில் திரியும் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (59

## கடனுதவி

(உடுவில்)

வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு தொடர்ந்தும் இலங்கை வங்கி கடனுதவிகள் வழங்கும் என இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர் திரு. கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். -910

## தளபாடங்கள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை ஸ்தான அமெரிக்க மிஷன் த. க. பாடசாலைக்கு அண்மையில் கதிரை, மேசை ஆகிய தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. தளபாடத் தட்டுப்பாட்டினால் முதலாம் வகுப்பு மாணவர்கள் நிலத்திலிருந்து கல்வி கற்று வந்தது குறிப்பிடத்தக்கது. -72

## முதலாமிடம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆங்கில தினப்போட்டியில் நாகர் கோவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலை முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது. (52)

## கலைவிழா

(பருத்தித்துறை)

தென்புலோலி அருணாசலம் பாடசாலையின் 2ம் ஆண்டு நிறைவுவிழாவும் கலைவிழாவும் அறிவகம் சனசமூக நிலைய முன்றலில் திரு. எஸ். ரகு தலைமையில் நடைபெற்றது -52

## ஜீவாகாரம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பூம்புகார் அநீரன் குடியிலுள்ள இடம்பெயர்ந்த ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு ஜீவாகாரம் வழங்கும் செயற்திட்டத்தினை யாழ். வட்ட லியோ கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாராட்டு விழா

(அளவெட்டி)

யாழ். மறை மாவட்டத்தின் குருநகர் புனித யாகப்பர் பங்குத் தந்தையாக ஆறு வருடங்கள் பணியாற்றி பருத்தித்துறை மறைப்பங்குக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ள அருட்திரு. பி. எம். இம்மானுவேல் அடிகளுக்கு பங்கு மக்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சேவைநலம் பாராட்டு விழா ஆலய முன்றலில் நடைபெற்றது. (59)

## தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னார் வைத்தியசாலையில் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதுபற்றி மன்னார் மக்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு தெரியப்படுத்தி இருக்கிறார்கள். உடனடியாக மருந்துகளை அனுப்பி வைத்து மன்னார்மாவட்ட நோயாளர்களின் துயரினை தீர்க்குமாறு ஸ்ரீலங்கா அரசைக் கேட்டுள்ளார்கள் என்று தெரியவருகின்றது. (ம)

# செய்திச்சிதறல்

### ''நெற்வேக்''

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் 'நெற்வேக்' என்னும் ஆங்கிலச் செய்தி மடல் ஒன்று வெளியிடப்பட்டு வருகிறது. (ரி)

### மெய்வல்லுனர் போட்டி

(ஏழாலை)

மருதனார் மடம் கோட்ட கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர்க்கான போட்டிகள் யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் நீர்வேலிக் கோத்தணி 96 புள்ளிகள் பெற்று முதலாமிடத்தையும் சுன்னாகக் கோத்தணி 83 புள்ளிகள் பெற்று இரண்டாம்இடத்தையும் மானிப்பாய் கோத்தணி 63 புள்ளிகள் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன. 165

### தொழுநோய் ஆய்வு

(பண்டத்தரிப்பு)

சுகாதாரப் பகுதியினரால் கடந்த ஜூலை மாதத்தில் யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழுநோய் ஆய்வுகளின்போது புதிதாக ஏழு பேருக்கு தொழுநோய் தொற்றியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 72

### வைத்திய சேவை நிலையம்

(கொழும்புத்துறை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினர் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு கோவில் வீதியில் வைத்தியசேவை நிலைய அலுவலகம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். 154

### இலவச வகுப்பு

(கொழும்புத்துறை)

தொல்புரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தொல்புரம் பாபுகல்வி வளர்ச்சிக் கழகத்தினால் பகல்நேர இலவச பாடவகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 3-00 மணி முதல் மாலை 5-45 மணிவரை தினசரி தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் இவ் வகுப்புகள் நடைபெறுகிறது 154

### சம்பளம் கிடைக்கவில்லை

(பண்டத்தரிப்பு)

வடபிராந்திய போக்குவரத்து சபையின் கோண்டாவில் காரைநகர் டிப்போக்களை சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாக சம்பளப்பணம் வழங்கப்படவில்லை. - 72

### மீளளிப்பு கடன்

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்உள்ள கட்டுடையில் இயங்கும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சுழற்சி முறையில் 5 லட்சம் ரூபாவை மீளளிப்புக்கடனாக கஷ்டப்பட்ட மக்களுக்கு வழங்கிவருகின்றது. [139]

### தொண்டர்களுக்கு சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச்சங்கம், கொழும்பிலிருந்து தமது தொண்டர்களின் பாவனைக்கு புதிய சைக்கிள்களை எடுத்துவந்து வழங்கியுள்ளது. இச்சைக்கிள்கள் ஒவ்வொரு கிளைகளுக்கும் நான்கு என்ற அடிப்படையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது! - எம்

### அறிவியல் கருத்தரங்கு

(நெல்லியடி)

பருத்தித்துறை ஐக்கியவிளையாட்டுக்கழகம்மாதந்தோறும் நடாத்தும் 'சிந்தனைத் துளிர்' தொடர் அறிவியல் கருத்தரங்கும், கல்வி ஆண்டு நிகழ்வும் அண்மையில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. 160]

### ஆண்டு நிறைவுவிழா

(நெல்லியடி)

புலோலி தெற்கு முருகையா கோவிலடி அறிவகம் சனசமூக நிலைய 48வது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப்போட்டியும் அண்மையில் திரு இ. சத்திவேந்திரா தலைமையில் நடைபெற்றது. 160

### குரக்கன் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்குச்சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன் அறவழிப் போராட்டக்குழுவினால் குரக்கன் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது

கிலோ 26 ரூபாவிற்கு குரக்கன் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது. -வி

### பிறப்புப்பத்திர பதிவு

(மானிப்பாய்)

யாழ் அரசினர் வைத்திய சாலையில் இவ்வருடம் ஜனவரி முதல் யூன் 31 வரையுள்ள 6மாத காலப் பகுதியில் பதிவுசெய்யப்படாமல் இருந்த பிறப்புப் பதிவுகள் யாவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. -162-71

### ஆசிரியர்கள் பாதிப்பு

(வட்டுக்கோட்டை)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில்சேவை ஆற்றிவிட்டு யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள் பலரது சுயவிபரக்கோவைகள் அனுப்பிவைக்காதபடியால் உரிய சம்பளம் பெறாது ஆசிரியர்கள் பலர் கஷ்டப்பட்டு வருகின்றனர். -139

### மயக்க மருந்து தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் மயக்க மருந்திற்குப் பெருந் தட்டுப்பாடேற்பட்டுள்ளமையால் நோயாளர்கள் பாதிப்படைந்து வருகின்றனர்.

வைத்தியசாலை அபிவிருத்தி சபை இவ்வைத்தியசாலைக்குத் தேவையான மயக்க மருந்துகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கைவிடுத்துள்ளது. (52-ரி)

### 180 குடிசைகள்

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கட்டுடையில் இயங்கிவரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ் 180 புதிய குடிசைகளை அமைத்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கவுள்ளது.

மேற்படி திட்டத்திற்கமைய முதற்கட்டமாக மானிப்பாயில் உள்ள செல்லமுத்து முகாமில் 12 புதிய குடிசைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. [139

### விளையாட்டுப்போட்டி

(பருத்தித்துறை)

நாவலர்கோவில் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த இல்லங்களுக்கிடையேயான மதிலக உடலாளர் போட்டியில் நாவலர் இல்லம் பச்சை இல்லம் 361 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டது விபுலானந்தர் இல்லம் (சிவப்பு இல்லம்) 353 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும் சோமசுந்தரர் இல்லம் மஞ்சள் இல்லம் 306 புள்ளிகளைப்பெற்று மூன்றாவது இடத்தையும் பெற்றன [52]

# தென்னாபிரிக்க வன்முறையில் 124 போர் உயிரிழப்பு

(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் தலைநகர் ஜொகனஸ்பேர்க்கிற்கு கிழக்கே கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்றுவரும் கறுப்பின வன்முறைகளில் இது வரையும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 124 ஆக உயர்ந்துள்ளதாக தெரியவருகிறது.

நேற்று முன் தினமிரவும் இப்பகுதியில் பலத்த மோதல்கள் இடம்பெற்றதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வன்முறைகளைத் தடுக்கும் வகையில் பலகட்சி அமைதி காக்கும் படையினர் கறுப்பின நகரங்களில் நிலை நிறுத்துவது குறித்து ஜனாதிபதி டி கிளார்க் ஆலோசித்து வருகிறார்.

வெளிநாட்டு அமைதி காக்கும் படைகள் வந்தால் தான் வன்முறைகளை நிறுத்த முடியுமென ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன்மண்டேலா ஆலோசனைகூறியுள்ளார்.

இதற்கிடையில் இன்னும் மூன்று வாரங்களில் தென்னாபிரிக்கா ஜனநாயக பேச்சுவார்த்தைக்கு தாம் திரும்பவுள்ளதாக சூலோ இனத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். (ரி)

# இந்திய படைகளுக்கு எதிராக காஷ்மீரில் ஆர்ப்பாட்டம்

## இராணுவம் துப்பாக்கிச் சூடு அறுவர் பலி

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் காஷ்மீரில் நேற்று முன்தினம் இந்தியப் படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது இந்தியப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஆறுபேர் கொல்லப்பட்டனர் முப்பதுபேர் காயமடைந்தனர். சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதியில் தீவிரவாதிகளை தேடும் நடவடிக்கை என்ற பெயரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களை படையினர் சுட்டுக் கொன்ற சம்பவத்தைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

இதேவேளை காஷ்மீரில் பல இடங்களில் போராளிகளுக்கும் இந்தியப்படையினருக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப் படுகிறது. ரி

### நோயினால் பாதிப்பு

(ஆனைப்பந்தி)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தற்போது நெருப்புக் காய்ச்சல், கண்நோய் என்பன வேகமாகப் பரவிவருகின்றன. சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்து தரப்பினரும் இந்நோய்களினால் பீடிக்கப் பட்டுள்ளனர். - 101-ரி

### சாரணர் சின்னம் சூட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தின் சாரணர் சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராக உதவி மாவட்ட ஆணையாளரும், இணைப்பாளருமான திரு. இ. ராஜ்குமார் கலந்துகொண்டார்

இவ்வைபவம் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அ

### சக்தி கவசம்

(கொழும்புத்துறை)

சரசாலை இலந்தைத் திடல் அருள்மிகு ஸ்ரீ வீரகாளியம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் ஆரம்பத்தன்று சரசாலை இந்து மன்றத்தினர் ஐம்பது அடியார்கட்கு ''சக்தி கவசம்'' நூலினை இலவசமாக வழங்கியுள்ளதாக மன்றச் செயலாளர் திரு. க. சிவசுவாமிநாதன் தெரிவித்துள்ளார். (154)

### கொடுப்பனவு

(மானிப்பாய்)

வேலணை பிரதேச செயலர் பிரிவில் தொழு நோய், புற்று நோய், சயரோகம் ஆகியவற்றிற்கான உதவிப்பணத்தினை பெற்றுக்கொள்பவர்களுக்கான சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் யாழ் பிரதேச தபாற்கந்தோரின் கிளையாக இயங்கும் வேலணை புங்குடுதீவு தபாலகங்களில் வழங்கப்படுகின்றன. - 72

### வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மூடப்பட்டிருக்கும் சிவாலயங்கள் யாவும் திறக்கப்பட்டு நித்தியகால பூசைகள் ஒழுங்காக நடைபெறவேண்டுமென்று உலகளாவிய இந்து சமயிகள் பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும் என்று இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு ஒன்றில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. 162

### நாட்டுக் கூத்து

(அரியாலை)

யாழ் பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டரங்கில் நாளை 6ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு முத்தாரக் கவிஞன் பாசையூர் புலவர் செகராசசிங்கத்தின் 10-வது படைப்பான ''சம்பூர்ண அரிச்சந்திரா'' எனும் நாட்டுக்கூத்து இலவசமாக நடைபெறவுள்ளது. (59)

# லாகூரில் குண்டுவெடிப்பு 20 பேர் படுகாயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் மத்திய நகரான லாகூரில் நேற்று முன்தினம் மூன்று குண்டுகள் வெடித்ததில் 20 பேர் வரை படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெடித்த மூன்று குண்டுகளில் ஒன்று உயர் நீதிமன்றத்திலும் இரண்டாவது குண்டு ரெயில்வே தலைமைக் கட்டிடத்திலும் மூன்றாவது குண்டு பரா ராணுவ தலைமைக்கட்டிடத்திலும் வெடித்திருப்பதாக கூறப்படுகிறது- - வி

# இளையராஜாவிற்கு ராஜ்யசபாவில் பாராட்டு

புதுடில்லி

தமிழ் நாட்டின் புகழ்பெற்ற இசையமைப்பாளர் இளையராஜாவிற்கு நேற்று முன்தினம் ராஜ்ய சபா உறுப்பினர்கள் பாராட்டுக்களை தெரிவித்தனர்.

தி. மு. க. உறுப்பினர்கள் திரு. வை. கோபாலசாமி ராஜ்ய சபாவில் இளையராஜாவை வாயாராப் புகழ்ந்து பாராட்டி வாழ்த்துக் கூறினார்

இசைமேதை இளையராஜாவை அரசாங்கம் விருது வழங்கிக் கௌரவித்திட வேண்டுமென அனைத்துக்கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர். - ரி

# அசோக் எழுச்சிக் கிராமம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்)

மன்னார்முருங்காவில் மேஜர் அசோக்குடன் பூநகரி ஒல்லாந்தர் கோட்டை தாக்குதலில் வீரமரணமடைந்த ஏழுமாவீரர்களை நினைவு கூரும் முகமாக அண்மையில் எழுச்சி குடியிருப்பு திறந்து வைக்கப்பட்டது

இக்கிராமம் யாழ்ப்பாண தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களை கொண்டு குடியமர்த்தி ஆரம்பிக்கப்பட்டது.

காலை நிகழ்ச்சியாக மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி நடைபெற்றது. முழங்காவில் கொத்தணிகளும் பூநகரி கொத்தணிக்குமிடையிலான சினேகபூர்வ தாச்சிப்போட்டி வலைப்பந்தாட்டம், ஆகியன இடம்பெற்றன.

மாலை மங்கள விளக்கை மாவட்ட தளபதி கதிர் ஏற்றி வைத்தார். அதனைதொடர்ந்து சிறப்புத் தளபதி ஜான் நாடாவை வெட்டி எழுச்சி கிராமத்தை திறந்து வைத்தார். ஏழு மாவீரர்கள் திருவுருவப்படத்தினையும் பொருண்மிய மேம்பாட்டுக் கழக துணைப்பொறுப்பாளர் இலக் திரைநீக்கம் செய்து வைத்தார்

பிரதான மங்கல விளக்கை வன்னி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் எம் ஜி ஆர். ஏற்றி வைக்க திருவுருவப்படங்களுக்கு பெற்றோர்கள் மங்களவிளக்கை ஏற்றி வைத்தனர். இதனைத்தொடர்ந்து வீரவணக்க கூட்டம் இடம்பெற்றது. பின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இவ்விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தங்கப்பதக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன. -ரி

### நீரிறைக்கும் யந்திரம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட பகுதி விவசாயிகளுக்கு இச்சங்கத்தினால் புதிய நீரிறைக்கும் யந்திரங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பம் செய்தவர்களின் பெயர்கள் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டு இன்று விநியோகிக்கப்படவுள்ளன.

# எமது பிள்ளைகளின் இறந்த உடலை கொண்டு செல்ல நாம் வரவில்லை

## கைதிகளின் உறவினர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இருந்து எமது பிள்ளைகளின் இறந்த உடலை கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்கு நாம் இங்கு வரவில்லை என்று கைதிகளின் உறவினரான ஒரு பெண்மணி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: எமது பிள்ளைகள் 7 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நேற்று முன்தினம் பகல் 11-00 மணியளவில் அவர்கள் நீராகாரம் அருந்தாது சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவி ஆகியோர் எமது பிள்ளைகளின் நிலைமை உணர்ந்து வடபகுதி மக்கள் கேட்கும் கோரிக்கையை நிறைவேற்றி எமது பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும்.

நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து 44 நாட்களாகின்றன. இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. (ம-இ)

# யுத்தக் கைதிகளை விடுவிக்க 'செடிக்' நிறுவனம் முயற்சி?

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் கைதிகளை யுத்தக் கைதிகளை விடுவிக்கும் முயற்சியில் 'செடிக்' நிறுவனம் ஈடுபட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றிய கடிதம் ஒன்றை விடுதலைப் புலிகளுக்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பிவைக்கும் நடவடிக்கையில் 'செடிக்' நிறுவன இயக்குநர் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

கூட்டுப் படைத் தலைமையகம் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள் பற்றி இதுவரை எதுவிதக் கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. இது சம்பந்தமாக யாழ்ப்பாணப் பேராயர் வண. சவுந்தரநாயகத்தின் உதவியை நாடவிருப்பதாகவும் அந்த நிறுவனத்தின் இயக்குநர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-இ)

# சோலைவரி அதிகரிப்பு இடைநிறுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

1993ம் ஆண்டின் மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் சோலைவரி அறவீட்டை யாழ் மாநகரசபை மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தி வைத்துள்ளதாக, யாழ் யாழ் மாநகர ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபை 1993 லிருந்து சோலை வரியை 200 சத வீதத்தால் அதிகரித்ததை ஆட்சேபித்து முன்னாள் மேயர் எஸ். நாகரராசா கொழும்பு மேல்நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவின் பிரகாரம், சோலைவரி அதிகரிப்பை இடைநிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் அறிவித்ததை தொடர்ந்தே யாழ் மாநகர ஆணையாளர் இவ் அறிவிப்பை விடுத்துள்ளார். (162.கே-இ)

### கொழும்பில் படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சார் தெரிவித்துள்ளனர்.

குண்டு வெடிப்பையடுத்து நேற்று மாலையிலும் இக் கோவிலை சுற்றி படையினர் நிறுத்தப்பட்டிருந்ததுடன் கோயில் தரிசனத்திற்கு பக்தர்கள் அனுமதிக்கப்படாது கோவில் கேற்பூட்டப்பட்டிருந்ததாம்.

மேலதிக விசாரணைகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. (இ)

# ஹெலி ரோந்து

(அரியாலை)

யாழ் குடா நாட்டின் கரையோரப் பகுதியில் நேற்று மாலை 5-45 மணியளவில் ஹெலி ஒன்று ரோந்து சுற்றி நோட்டமிட்டு சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. (59-இ)

# கிரிக்கெட்: இலங்கை; 226-4

(கொழும்பு)

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெறும் 3வது இறுதி கிரிக்கெட் டெஸ்டின் 1ம் நாள் ஆட்ட முடிவில் இலங்கை அணி 4 விக்கெட் இழப்பிற்கு 226 ஓட்டங்களை பெற்றது.

இல் குருசிங்க 56, அரவிந்த டி. சில்வா ஆட்டமிழக்காமல் 118 ஓட்டங்களை பெற்றனர். 3வது விக்கெட் ஜோடியாக இவர்கள் 136 ஓட்டங்களை பெற்றனர். (இ)

### யுத்தத்தைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனராம்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் சிக்கித் தவிக்கும் அரசுக்கு, எதிரணியினரின் இந்த ஆதரவு, ஓரளவுக்கு உற்சாகம் ஊட்டுவதாக அமையுமெனப் பலரும் கூறியுள்ளனர். (இ)

### கைதிகள் மூவரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு இது குறித்து அலட்சியப்படுத்தி வருவதையடுத்துப் பொறுமையை இழந்தவருவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது

இதுவரை இந்தக் கைதிகளின் உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் எதுவித நடவடிக்கையிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம-இ)

### ஐரோப்பாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்கள், ஹெலிகொப்டர்களுக்கான உதிரிப்பாக கொள்வனவிலும் இக்குழு பெரிதும் அக்கறைகாட்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பிரிட்டனிடமிருந்து இராணுவத்தினருக்கான பல விதமான ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் ஓரளவு குறைந்த விலையில் பலகோடி ரூபாவிற்கு அரசு கொள்வனவு செய்யவுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

### அரசுக்கு எழுதும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தை அணுக விடுவதில்லை என யுத்தக் கைதிகளின் பெற்றோர் தீர்மானித்திருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை உண்ணாவிரதமிருந்துவரும் யுத்தக்கைதிகளின் உடல்நிலை மோசமாக பாதிப்படைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இன்றுடன் 8 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகள் கடந்த 3 நாட்களாக நீர் அருந்துவதையும் நிறுத்திக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கே-இ)

# மரண அறிவித்தல்

## அப்புக்குட்டி நல்லையா

(இளைப்பாறிய துறைமுககூட்டுத்தாபனஉத்தியோகத்தர்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட அப்புக்குட்டி நல்லையா காலமானார் இவர் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி பத்மினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீபாலன், ஸ்ரீரஞ்சனிதேவி, நவரஞ்சினிதேவி, காலஞ்சென்ற கலாரஞ்சினி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வை. நடேசு நடராசரத்தினம் (நாகம்ஸ் சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லையா, கந்தையா, செல்லம்மா மற்றும் கதிராசிப்பிள்ளை, நல்லம்மா ஆகியோரின் சகோதரரும், தபேசன், சிவரஜனி, சிவராஜினி, ரேணுகா, முகுந்தன், ரேவலா, ரேகா, மயூரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது ஈமைக்கிரிகைகள் இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக 2-00 மணியளவில் கோத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகம்மா
(மனைவி)

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

(இ 385)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Gennaral Post Office, Sri Lanka under Licence Number B/10336/B

# சுவாமி சின்மயானந்தா அமெரிக்காவில் காலமானார்

(புதுடில்லி)

இந்தியாவின் தலைசிறந்த ஆன்மீகவாதியும் 40 ஆண்டுகளுக்கு மேல் 'கீதா உபதேசம்' நடாத்தி லட்சக்கணக்கான மக்களை பக்தி பரவசத்தில் ஆழ்த்தி வந்த சுவாமி சின்மயானந்தா 79 வயது நேற்று முன்தினமிரவு கலிபோர்னியா மருத்துவ மனையில் காலமானார்.

இருதய அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். சென்ற வாரம் இவருக்கு அறுவைச் சிகிச்சை நடந்த போதும் உடல் நிலை மோசமடைந்து நேற்று முன்தினமிரவு காலமானார்.

1914-ம் ஆண்டு கேரளாவில் பிறந்த இவர் முதலில் பத்திரிகையாளராக பணியாற்றினார். பின்னர் ஆன்மீகத்தில் ஈடுபட்டு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஏராளமான பள்ளிகளையும், ஆசிரமங்களையும் நிறுவினார்.

இவரது உடல் இந்தியா கொண்டு வரப்பட்டு இமயமலை அடிவாரத்தில் தகனம் செய்யப்படும். (இ)

# கிட்டு ஞாபகார்த்தமாக சுவிஸில் முத்தமிழ் விழா

(சூரிச்)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டுவின் ஞாபகார்த்தமாக முத்தமிழ் விழா ஒன்று சுவிற்ஸலாந்தில் அண்மையில் நடைபெற்றது

விடுதலைப்புலிகளின் ஐரோப்பிய கிளையே இந்த முத்தமிழ் விழாவை ஒழுங்கு செய்திருந்தது ஆனையிறவுப் போரில் மாவீரரான ஒரு போராளியின் சகோதரி மங்கள விளக்கேற்றி வைத்தார். அத்தோடு கேணல் கிட்டுவின் உருவப்படமும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

கேணல் கிட்டுவின் ஞாபகார்த்தமாக வைத்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தமிழீழம் பொறித்த தங்க நாணயங்கள் பரிசளிக்கப்பட்டன. இறுதியில் கலை நிகழ்ச்சியும் இடம் பெற்றன. - ம-சி

# கொழும்பு ஆஸ்பத்திரியில் மருந்தாளர்வேலைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் பணிபுரியும் மருந்தாளர்கள் நேற்று திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

சுகாதார அமைச்சிடம் இவர்கள் முன் வைத்த கோரிக்கையை நிறைவேற்றுமாறு கோரியே இந்த வேலை நிறுத்தம் இடம்பெற்றது.

மருந்தாளர்களின் வேலை நிறுத்தத்தால் ஆஸ்பத்திரியில் பல சேவைகள் ஸ்தம்பித நிலையை அடைந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மருந்தாளர்களின் கோரிக்கைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இன்று சகல மருந்தாளர்களும் வேலைக்குத் திரும்புமாறும் சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (ம-இ)

# இந்திய அணிக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் கதிரேசன் கோவிலில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளையடுத்து கொழும்பில் தங்கி நிற்கும் இந்திய கிரிக்கெட் அணிக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் போது மைதானத்திற்கு வெளியேயும் உள்ளேயும் அதிரடிப்படையினர் பலர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் தங்கியிருக்கும் தாஜ்சமுத்திரா ஹோட்டலின் பாதுகாப்பும் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (சி)

### லண்டன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை வடக்கு-கிழக்கு மாநிலத்தை அரசு ஒன்றுக இணைத்தால் விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினை தீர்வுக்கு முன்வருவார்கள் என புலிகளின் ஆதரவாளர்கள் லண்டனில் தெரிவித்துள்ளனராம். (சி)

### கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருதய அறுவைச் சிகிச்சை செய்த போது இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளதாம்.

இருதயத்தின் உள்ளே தவறுதலாக வைத்து தைக்கப்பட்ட 'நம்பர் 15' என்ற கத்தியை எடுப்பதற்கு மீண்டும் இரண்டாவது முறையாக அறுவைச் சிகிச்சை செய்ததினால் அவர் இறந்துள்ளார் என்றும், இச்சம்பவம் பற்றி மருத்துவ இயக்குநர் எம். எச். பெருண்டோ இதுவரை எந்தவித கருத்தையும் தெரிவிக்கவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-இ)

# கருத்தரங்கு

உடுவில்

மருதனார்மடக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் இசை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு உடுவில் இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் ஏழாம் திகதி நடைபெறவுள்ளது.

சங்கீதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெறும். (109)

# நீர்முகாமைத்துவ ஆய்வு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் கிளிநொச்சியிலே மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வு வட்ட அமர்வில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட அமர்விலே "நீர் முகாமைத்துவம்" எனும் விடயம் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டது. இந்த அமர்விலே திட்ட உபகுழுக்கள், விவசாயக் குழுக்கள் போன்ற விவசாய அமைப்புகளும் கலந்து கொண்டன.

இந்த அமர்வில் விவசாயிகளுக்கான பயிற்சி நடத்துதல் வாய்க்கால் திருத்தம் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. (நி)